சுபா செந்தில்குமார் (Subha Senthilkumar)


**<u>ஜனனம்</u>**

மரணம்

தொடும் தொலைவில்

எழுதப்படுகிறது

முதல் அத்தியாயம்

உள்ளிழுத்த உயிர் மூச்சு

விந்து விதைத்ததை

உந்தித் தள்ள

உன்னதமாய் அரங்கேறியது

உயிர் பகிர்தல்

உடல் வருத்திய

கொடும்பிணி அனைத்தையும்

மொத்தமாய் கரைத்தது

சேயின் முதல் தீண்டலில்

சிலிர்த்து சிதறிய

கண்ணீர்த்துளி

உடற்கொடி அறுத்தபின்னும்

பிணைத்து நிற்பதெதுவென

திகைத்து நின்றது…

அடுத்த அத்தியாயம்தனை

ஏழில் சனி

எட்டில் குருவென்று

கட்டங்களில் அடைக்க

காத்திருந்த காலம்

**குழந்தை**

சிறகடித்து

தேவதை என்றாள்

சிறுபல் கடித்து

பூதம் என்றாள்

மாறாத என் முகம்கண்டு

போ! உனக்கு பயமே வரவில்லை – என

செல்லக் கோபம் கொண்டாள்...

எப்படிச் சொல்வது அவளுக்கு

நான் பார்த்தது

தேவதையை மட்டுமே என்று!

நான் ஒவ்வொருமுறை

அவளிடம் தோற்கும்போதும்

ஒரு நொடி சிரித்து

மறு நொடியே

இம்முறை

நான் தோற்கிறேன்

நீ ஜெயித்துக்கொள் என்கிறாள்...

எப்படிச் சொல்வது அவளுக்கு

நீ இப்படியே இருந்துவிடு என்று!

எங்கள் கண்ணாமூச்சி

விளையாட்டுக்களில்

தன் பிஞ்சு விரல்களின்பின்

அவள் மறையும்போதேல்லாம்

நான் தொலைந்து போகிறேன்!

அவளின்

செல்ல வைத்தியத்திற்காகவே

தினமும் நோயுறுகின்றன

பொம்மைக் கிளிகளும், கரடிகளும்...

நானும்...

விழுவதும்

விழுந்து எழுவதும்

துயர்வரின் அழுவதும்

கவலை மறப்பதும்

சுகித்ததை துறப்பதுமென...

நான் தொலைத்தது

அனைத்தும் தந்து

யாதுமாகி நிற்கிறாள் அவள்!

**இளமை**

நீ அனுப்பிய

திரவியங்களில்

விலகவில்லை

என் மீது படர்ந்திருக்கும்

உன் வாசம்...

நீ வாங்கித்தந்த

குளிர்சாதனத்திற்கு

தணியவில்லை

நம் நெருக்கத்தில்

நீ என்னுள்

விதைத்து சென்ற

உன் சுவாச தகிப்பு...

சிறு தீண்டல்கள்

தந்த தருணங்களை

தரவில்லை

உன் ஆயிரம்

முத்தங்களை

சுமந்து வரும்

குறுஞ்செய்திகள்...

காதல்

காமம்

கண்ணீர் - என

எதையும்

பிரித்துணர முடிவதில்லை

உன் தொலைபேசி

தீண்டல்களில்...

உன் காதல்

தொடாத

இந்த தேகத்தை

இன்று

காமமுற்று

கலவிச் சிதைக்கிறது

என் தனிமை

**முதுமை**

அனுபவங்கள்
அனைத்தையும்
கோடிட்டு
குறித்து வைத்துக்கொள்கிற
சுருக்கங்கள்...

என் கவனம் ஈர்க்கும்
முயற்சிகள் அனைத்தையும்
காலம் கடந்ததென
கடந்து விடுகிறது காலம்...

ஆசிர்வதிக்க மட்டுமே
ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிற
என் கரங்கள்...

இடறும் நடை
பிறழும் மொழி
தவறும் நினைவுகள் - என
என் குழந்தை குணங்கள்
அனைத்தும் இன்று
ரசிக்கப்படுவதே இல்லை...

காத்திருக்கிறோம்
கிளை உதிர்க்கட்டும் என்று காற்றும்
காற்று உதிர்க்கட்டும் என்று கிளையும்
விளிம்பு இலையாய் நானும்...

**<u>மரணம்</u>**

தவிர்க்க முடியவில்லை
எனக்கான
மாலைகளையும்
மரியாதைகளையும்

ஆயிரம்முறை
அரிதாரம் பூசியும்
எப்படியோ
வெளிப்பட்டுவிட்டது
ஆழ்மனதின் குரூரம்
கொப்பளித்து தள்ளிய
விகார முகம்

வியர்வை மனிதர்களை
விலக்கிய எனக்கு – இன்று
மூச்சு முட்டுகிறது
என் மீது
தெளிக்கப்பட்ட
நறுமணம்

நான்
வெறுப்புடன் வீசிய
வார்த்தைகளனைத்தையும்
இன்று மௌனமாய்
உமிழ்ந்து பிரியும்
உறவுகள்

கால்வயிறு நிரம்பியவன்

இடும் அரிசிகூட

வாய்க்கு மட்டுமே

வசப்படுகிறது

வயிறுக்கு அல்ல

நிறைந்திருக்கும்

மயான மௌனத்திலும்

எனக்கு மட்டும் கேட்கிறது

புழுதியாய் அடங்கிய

சாம்பல் மீதமர்ந்து

காலமும் காலனும்

நடத்தும் விவாதம்...

புறக்கணிக்க வேண்டிய

இந்த அத்தியாயத்தை

புதைப்பதா?

எரிப்பதா?